பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 11 2024 **THURSDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், காரைக்கால் - மகாபலிபுரம் இடையே நாளைமறுநாள் காலை, கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2. நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பயிர் சேதம் குறித்த கள ஆய்வுப் பணி நடைபெற்று வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. விஸ்வகர்மா திட்டத்தை அரசியலுக்கு அப்பாற்பட்டு திமுக அரசு செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. சீன ஓபன் **Taekwondo** போட்டியில் இந்தியா 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், காரைக்கால் - மகாபலிபுரம் இடையே நாளை மறுநாள் காலை கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் திரு. பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்றிரவு இது புயலாக வலுவடைந்து, கரையை கடப்பதற்கு முன் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கக் கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (1) 48 செகண்ட்ஸ்)

இதன் காரணமாக, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (2) 47 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, கடல் சீற்றத்துடன் காணப்படுவதால், கடலூரில் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 6 மீனவர்களை கடலோர காவல்படையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

தோணித்துறை பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்கள் சென்ற படகு, எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதை அடுத்து, ஆறு மீனவர்களும் நடுக்கடலில் உள்ள தனியார் தொழிற்சாலைக்கு சொந்தமான துறைமுகத்தில் தஞ்சமடைந்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக உணவு, குடிநீர் இன்றி தவித்து வந்த இவர்களை, கடலோர காவல்படையினர் ஹெலிகாப்டர் மூலம் மீட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பயிர் சேதம் குறித்த களஆய்வுப் பணி நடைபெற்று வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பயிர்களின் பாதிப்பு 33 சதவீதம் அளவிற்கு ஏற்பட்டிருந்தால், கணக்கெடுப்பிற்குப் பின்னர் உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டத்திலும் திமுக அரசியல் செய்வதாக பிஜேபி மகளிர் அணித் தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டத்தின் உன்னத நோக்கங்களை முதலமைச்சர் அரசியல் ஆதாயத்திற்காக சிதைக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த திட்டத்தில் இணைய தமிழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான கைவினைக் கலைஞர்கள் ஆர்வத்துடன் உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கைவினைக் கலைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாநிலங்களில் இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, லட்சக்கணக்கான கைவினைக் கலைஞர்கள் பயனடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு அரசியல் விளையாட்டுகளை தவிர்த்து, விஸ்வகர்மா திட்டத்தை தமிழகத்தில் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றும் திருமதி. வானதி சீனிவாசன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>><<<<<

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி, அமளியில் ஈடுபட்டபோது அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

ஆக்கபூர்வமான விவாதங்கள் அவையில் நடைபெற வேண்டியது அவசியம் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் கூறினார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக மூன்றாவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.

>>>>><<<<<

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் இதுவரை மூன்று கோடியே 40 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த இணையதள சேவை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு அமைப்புசாரா தொழிலாளரும் இதில் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

இந்த இணையதளத்தில் பதிவு செய்வோருக்கு ஒருங்கிணைந்த கணக்கு எண் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற அறைகளிலும் காணொலிக் காட்சி வசதி ஏற்படுத்தப்படவுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், ஆயிரத்து 169 நீதிமன்ற அறைகளில் தற்போது 267 அறைகளில் இந்த வசதி உள்ளதாக குறிப்பிட்டார்.

எஞ்சியுள்ள 902 அறைகளிலும் காணொலிக் காட்சி வசதி ஏற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

பிரதமரின் நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவி திட்டத்தின்கீழ், 67 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த நகர்ப்புற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. **Tokhan Sahu,** 13 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்த திட்டம் கடந்த நான்காண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டம், ஓதியம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான வழிகாட்டி வினாடி வினா தொகுப்பினை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் மாணவர்களுக்கு இன்று வழங்கினார்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், கீரம்பூரில் உள்ள செவிலியர் கல்லூரியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆட்சியர் திருமதி. உமா தலைமையில் இன்று நடைபெற்றன.

>>>>><<<<<

தஞ்சாவூரில் நாளை நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஆட்சியர் திருமதி. பிரியங்கா பங்கஜம் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தூத்துக்குடி பத்திரப்பதிவு அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை காலங்களில் அதிக பாதிக்கப்படக்கூடும் என கண்டறியப்பட்டுள்ள 133 இடங்களில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆட்சியர் திரு. பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

திருச்சி விமான நிலையத்தில் மலேசியாவிலிருந்து வந்த பயணியிடமிருந்து 13 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

சீன ஓபன் **Taekwondo** போட்டியில் இந்தியா 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

**Shaoxing**—ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் **Shruti Singh-**ம், 53 கிலோ எடைப்பிரிவில் **Sarwar Kaur-**ம், 62 கிலோ எடைப்பிரிவில் **Afreen Hyder-**ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவில் **Suhrab Singh** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**>>>>><<<<<**

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் உன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**Lucknow-**வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-18, 22-20 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Pompicha Choeikeewong-**ஐ வென்றார்.

இதர காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களின் மகளிர் பிரிவில் தஸ்னிம் மிர்-ம், ஆடவர் பிரிவில் பிரியன்சு ரஜாவத் மற்றும் லக்க்ஷயா சென்னும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>END<<<<<**